* 413 வினு.—திரு கோ. இளங்கோவன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலா துறை அமைச்சர் தயவு செய்து கீழ்வண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கல்லணையில் ஒரு சுற்றுலா மாளிகை அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது, எத்தனை ரூபாய் செலவில் அமைக்கப் படவிருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :—

(அ) இல்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

* 414 வினு.— திரு மே. சி. தூயமணி : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப் பாரா —

மேட்டுப்பாளையம் தொகுதி கல்லாறு பகுதியில் சுற்றுலா விடுதி அமைப்பது குறித்து அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மேட்டுப்பாளையம் தொகுதி கல்லாறில் சுற்றுலா மாளிகையொன்று கட்டுவதற்கான செயற்குறிப்பு எதும் தற்போது இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : கன்னியாகுமரிக்கு வெளிநாட்டி லிருந்தும் நம் நாட்டிலிருந்தும் நிறைய சுற்றுப்பயணிகள் வருகிருர்கள். அங்கே இப்பொழுது இருக்கிற இடம் போதவில்லை என்ற காரணத் தினுல் ஏற்கனவே சுற்றுலாத் துறை இது போன்ற குடில்கள் அமைப் பதற்கான திட்டம் வகுத்திருந்ததே அது கைவிடப்பட்டதா ? இப் பொழுது எதாவது அதை நிறைவேற்றுவதற்கு திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படி குடில்கள் கட்டுவதற்கான் திட்டம் எதுவுமில்லை. நான் ஏற்கனவே குறிப்பிட்ட படி 9 ஏர்கண்டிஷன் அறைகளும், இருவர் தங்கும் அறைகள் 19-ம் அமைக்கப்பட்டிருக்கின்றன. இது தவிர ஒரு டார்மெடரியும் வைத்திருக் கிறேம். இதுவே போதுமான அளவுக்கு அங்கே அமைந்திருக்கிறது. மேலும் தேவைப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட வேண்டும். நாம் கட்டினுல் வருமானம், மற்றவைகள் வரவில்லை என்று சூழ் நிலை ஏற்பட்டால், அதனுல் நமக்கு நட்டம்தான் ஏற்படும்.